
பென்னின் மந்திர
தொலைநோக்கி



பிரியன் பட்டேன்
தமிழில் கிருஷ்ணன்




பென் ஒரு பழைய கட்டிடத்தில் பத்தொம்போதாவது மாடியில் வசித்து வந்தான். அவன் வாழ்ந்து வந்த நகரம் ஒரு பெரிய ஆனால் மாசுபாடடைந்த நகரமாகும். அவன் ஜன்னலிலிருந்து தொழிற்சாலைகளும் மற்ற உயரமான கட்டிடங்களும் தெரிந்தன. நாள்தோறும் இந்த கலையில்லாத கட்டிடங்களையே பார்த்த அவனுக்கு வெறுத்தே போயிற்று. ஏதாவது எதிர்பார்க்காத, வித்தியாசமான சுவாரசியமான நிகழ்வு தன் வாழ்வில் நடக்காதா என்று ஏங்கினான்.



அந்த கட்டிடத்தின் பத்தொம்போதாவது மாடியில் இருந்த மேல்தளத்தில் குப்பைகளுக்கு நடுவில் பென் னுக்கு ஒரு வெள்ளி தொலைநோக்கி கிடைத்தது.


அதில் சிறிய சூரியன் நிலா இரண்டையும் செதுக்கியிருந்தார்கள். அதற்கும் நடுவில் ஒரு திறந்த கண் இருந்தது. பென் அதை அவனது அறைக்கு எடுத்து சென்றான். அங்கிருந்த ஜன்னல் வழியாக தொலைநோக்கி கொண்டு பார்த்தான்.




கட்டிடங்களுக்கு இடையே இருக்கும் தெருவில் சந்தை ஒன்று இருப்பதை பார்த்தான். அந்த கடைகளின் மேல் இருக்கும் கூரை யில் மழை துளிகள் இருப்பதை கூட அவனால் அந்த தொலைநோக்கி கொண்டு பார்க்க முடிந்தது.

அவ்வளவு அருகில் தொலைநோக்கி மூலம் அந்த மழை துளி தெரிவதை அவனால் நம்பவே முடியவில்லை.

ஆரஞ்சு, ஆப்பிள் பழங்கள் பீச், பிளம்ஸ் பழங்கள் எல்லாம் பல வண்ணங்களில் மிளிர்ந்தன. அந்த ஆரஞ்சு பழங்களில் இருந்த சிறு பள்ளங்களை கூட அவனுக்கு பார்க்க முடிந்தது. ஆப்பிள் பழங்கள் அடுக்கி வைத்திருப்பது வரைபடம் போல அவனுக்கு தெரிந்தது. எவ்வளவு நுணுக்கமாக தொலைநோக்கியில் பார்த்தானோ அவ்வளவு தெளிவாக அவனுக்கு எல்லாம் தெரிந்தது.






செவ்விந்திய பெண்களின் கடைகளில் கட்டுக்கட்டாக அழகான துணிகள் வைத்திருந்தனர். விதவிதமான வண்ண நூல்களில் அவை தைக்கப்பட்டிருந்தது. வீடு சாமான்கள் விற்கும் கடையில் கண்ணாடி குடுவையில் மக்களின் பிரதிபலிப்பும் தெரிந்தது.



பென் தொலைநோக்கியை பிடித்து கொண்டு ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு திருப்பினான். அவன் தினமும் காண்கிற நகரத்தை இன்னும் அருகாமையில் அவனால் பார்க்க முடிந்தது. அது அவனை ஆச்சரியமடைய வைத்தது.

ஒரு தொழில்சாலையின் சுவற்றில் பூனை ஒன்று தன் அடிபட்ட பாதத்தை நக்கி கொண்டிருந்தது.




ஒரு வயதானவர் குனிந்து ஏதோ செய்து கொண்டிருப்பதை கவனித்தான். அவர் விதைகளை விதைத்து கொண்டிருந்தார். அவருக்கு அருகாமையில் பூக்கள் பூத்திருந்தன.



ஒரு குளத்தில் தும்பி ஒன்றை பார்த்தான். அதன் இறக்கைகள் தேவாலயத்தின் கண்ணாடி ஜன்னல்களை போன்று இருந்தன குருவி ஒன்று பாட்டுபட வாயை திறந்த போது அதன் சிவப்பு நிற நாக்கை பார்த்து ரசித்தான்.

தொலைநோக்கியை கொண்டு சூரிய வெளிச்சத்தாள் நிரம்பிய சிலந்தி வலையை கண்டான் பென். அதில் சிலந்தி வலையை பின்னி கொண்டிருந்ததையும் அவனால் பார்க்க முடிந்தது. தட்டான் பூச்சி ஒன்று ஒரே நாளில் வயதானதையும் பார்த்தான்.

பென் தொலைநோக்கியை சரி செய்தான். இப்போது அவனால் கடலை தாண்டி தெரிகிற பணியையும் சூரிய வெளிச்சம் பட்டு ஒலிகின்ற ஐஸ் கட்டிகளையும் பார்க்க முடிந்தது.
பூமியின் அடிவானத்தை அவனால் பார்க்க முடிந்தது.
ஒரு கைக்குட்டையை போன்று பாய் மற கப்பல் ஒன்று தெரிந்தது.
ஒரு திமிங்கலம் தண்ணீர் மேல் வந்து போன போது அலைகளிலிருந்து நீரூற்று வருவது போல் தெரிந்தது.





பனி மழை விழுவதிலிருந்து பத்து
பில்லியன் வடிவங்களை அவனால்
பார்க்க முடிந்தது.
இரண்டு பனி மலைகளுக்கு நடுவில்
இரண்டு பிரகாசமான வானவில்லை
அவனால் காண முடிந்தது.


பனியின் மீது படர்ந்து இருந்த செடிகள்
சூரிய வெளிச்சத்தை உறிஞ்சு
கொண்டிருந்தன. உறைந்த பனியின் கீழ்
பந்து போல பனிக்கட்டிகள் தோன்றின.




மீண்டும் தொலைநோக்கியை சரி செய்தான்.
இப்போது அவனுடைய ஊர் தெரிந்தது.
அங்கு சூரியன் மறைந்து இரவு வர தொடங்கியது. ஒரு மரத்திலிருந்த கருப்பு ஓட்டையிலிருந்து ஏதோ மினுங்குவதை பார்த்தான் பென்.
ஆந்தை கழுத்தை திருப்பி அதை பார்த்து கொண்டிருந்தது.
ஒரு வளைக்கரடி முகர்ந்து கொண்டே அந்த மரத்தை தாண்டி சென்றது.

ஆந்தையின் கண்களில் சூரியனின் கடைசி வெளிச்சம் மினுமினுத்தது.
தானியம் நிறைந்த இடத்திற்கு நடுவில் இருந்த கூட்டிலிருந்து ஒரு எலி தானியத்தை தின்று விட்டு ஓடுவதையும் கண்டான்.





இரவு பூச்சிகளின் ரீங்கார ஒலிக்கு
வண்டு ஒன்று ஆடுவதை கண்டான்.
அதன் பளப்பான முதுகில் நிலாவின்
பிரதிபலிப்பு விழுவதை கண்டான்.
நிலவின் பள்ளங்களில் அவனுடைய
தொலைநோக்கி மூலம் ஒரு விண்வெளி
வீரரின் அடிச்சுவடுகளை கண்டான்.

பின்னர் அவனுடைய தொலைநோக்கியின்
மூலம் கோள்கள் எப்படி பூமியை சுற்றி
கொண்டிருக்கின்றன என்று கவனித்தான்.
இரவு ஈன்ற பிள்ளைகள்
போல நட்சத்திரங்கள் மினுமினுத்தன.



பென் பல காட்சிகளை அருகாமையில் பார்த்ததால் பிரமிப்பில் அயர்ந்தே போனான். கவனமாக தொலைநோக்கியை அவனது மேசையில் வைத்து கொண்டான். பின்னர் ஜன்னல் வழியாக நகரத்தை பார்த்தான். அதே கட்டிடங்களும் தொழிற்சாலைகளுமே இருந்தது. ஆனால் அவைகளை தாண்டி ஒரு புது உலகமே இருப்பது அவனுக்கு தான் தெரியும்.





பென் இனி ஒரு போதும் அவனை சுற்றி இருக்கும் உலகத்தை
பழையபடி பார்க்கேவே போவதில்லை.

முற்றும்